**டவர்ஹோல் மன்றம் - 2019**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

**டவர்ஹோல் மன்றத்தின்** 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதி அறிக்கைகள் தொடர்பான முகாமைத்துவம் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிர்வாகங்களை மேற்கொள்ளும் தரப்பினர்களதும் பொறுப்புக்கள்.

இந் நிதி அறிக்கை இலங்கை அரசதுறை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்படுதல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுதல் மற்றும் மோசடிகள் அல்லது தவறான விடயங்களால் நிகழும் அளவிடமுடியுமான போலியான அறிக்கைகளைத் தவிர்த்து நிதி அறிக்கைகளைத் தயாரிக்கத் தகுந்த வகையில் தகுந்த உள்ளக நிர்வாகக் கட்டமைப்பை பேணுவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
நிதி அறிக்கைகள் தயாரிக்கப் படும்போது, மன்றத்தை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கான இயலுமையை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் ஒரு பொறுப்பாகும் என்பதுடன், முகாமைத்துவம் மன்றத்தை கலைப்பதற்கு எண்ணுமேயானால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாத சந்தர்ப்பத்தில் செயற்பாட்டை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமேயானால் அன்றி தொடர் நிலைப்பாட்டின் அடிப்படையில் கணக்குகளைப் பேணுவதும் மன்றத்தின் தொடர்ச்சியான செயற்பாட்டுக்குரிய விடயங்களை தெளிவு படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மன்றத்தின் நிதி அறிக்கையிடற் செயற்பாடு சம்பந்தமாக மீளாய்வுப் பொறுப்பு, அவை தொடர்பான தரப்பினர்களால் மேற்கொள்ளப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம், அறக்கட்டளையின் வருடாந்த மற்றும் இடைக்கால நிதி அறிக்கைகள் தயாரிக்கப் படுவதற்கு ஏற்ற விதத்தில் சுய வருமாம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்மந்தமாக முறையான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்பட வேண்டும்.

### 1.4 கணக்காய்வு அதிகார எல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்பட்ட கணக்கியல் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் முகாமைத்துவம் மூலம் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக மன்றத்தின் தொடர்ச்சியான செயற்பாடு தொடர்பாக அளவைக்குறிய நிச்சயமின்மை காணப்படுகின்றதா என்ற நிலை சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கியலுக்கான நிறுவனத்தின் தொடர்ச்சியான செற்பாடு தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தும் பொருத்தப்பாடு தீர்மானிக்கப்பட்டுள்ளது. போதிய நிச்சயமற்ற நிலை உள்ளது என நான் முடிவு செய்கின்றேன் எனில், நிதி அறிக்கைகளில் அவை தொடர்பானவற்றை வெளிப்படுத்துவதில் எனது கணக்காய்வு அறிக்கையின் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாரான வெளிப்படுத்துகை போதியதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயம் மாற்றியமைக்கப்பட வேண்டும். எவ்வாரெனினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக தொடர் செயற்பாடு இல்லாமல் போக முடியும்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

  இயலுமான அளவுக்கு மற்றும் தேவைப்படும் எல்லா சந்தர்ப்பங்களிலும் கீழ்க் காட்டப்பட்டுள்ள விடயங்கள் ஆய்வு செய்யப்பட கணக்காய்வு விடயப் பொருள் விரிவாக்கப் பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பிக்கப் படுதல் சம்பந்தமாகப் பார்க்கும் போது அறக்கட்டளையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்யப் படுவதற்கு ஏற்ற விதத்தில் அதன் அமைப்பு, தொகுதி, செயல்முறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் வேறு எழுத்தாவணங்கள் முறையாக மற்றும் அளவைக்குறிய விதத்தில் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளதா எனவும், மற்றும் குறித்த தொகுதி, செயல்முறை, புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் வேறு எழுத்தாவணங்கள் பயனுள்ள விதத்தில் பேணப்பட்டு வருகின்றதா எனவும்;

- ஏதேனும் குறித்த எழுதப்பட்ட சட்டத்துக்கு அல்லது அறக்கட்டளையின் நிர்வாக சபையால் வெளியிடப்பட்ட வேறு பொது அல்லது விசேட ஆணைக்கு ஏற்ப, அறக்கட்டளை செயற்பட்டுள்ளது எனவும்,

- தனது அதிகாரம், நிலைமை மற்றும் செயற்பாடுகளுக்கு உட்பட்டதாக செயலாற்றியுள்ளமை பற்றியும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்றிறனாகவும் மற்றும் பயனுள்ள விதத்தில் கால வரையறைக்குள் மற்றும் குறித்த சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு ஒதுக்கப்பட்ட வளங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன எனவும்,

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் வரையறுக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்தல், தொடர்புடைய அறிக்கையிடல் நியமங்களுக்கு அமைவாக நிதி அறிக்கைகளை தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்கள் தொடர்பான கணக்கு விவரங்களை நடாத்திச் செல்லல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் வரையறுக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் ஆதனங்களுக்குள் பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பான கணக்கியற் செயற்பாடுகள், தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால வரையறைக்குள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படின் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கைகள் எடுத்தல் போன்றவற்றுக்கு நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக் கொள்வதற்குப் போதுமான "சிறப்பாக திட்டமிடப்பட்ட" உள்ளகக் கணக்கியற் கட்டுப்பாடுத் தொகுதி ஒன்றை நிறுவனம் நடாத்திச் செல்வது மிக முக்கிய விடயமாகும்.

### 1.5.2 இலங்கை அரசதுறைக் கணக்கியல் நியமங்களுடன் இணங்காதவைகள்

| | குறித்த நியமக் குறிப்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்து வெளிப்பாடு | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை அரசதுறை கணக்கியல் நியமம் 07 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனத் தொகுதி மற்றும் உபகரண உருப்படி ஒன்றை | எதிர்காலத்தில் மறு மதிப்பீடு செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுப்போம் என தயவுடன் | தர நியமங்களின் படி சொத்தொன்று உரித்தாகும் ஆதனத் தொகுதி மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | மறுமதிப்பீடு செய்யும்போது, அவ்வாதனம் உரித்தான சொத்துத் தொகுதி மற்றும் உபகரணங்களின் வகுப்பு மொத்தமாக மறு மதிப்பீடு செய்யப்பட வேண்டும் எனினும், 2016 ஆம் ஆண்டில் நிலவிய காணி மற்றும் கட்டிடங்களில் பிரதான அலுவலகக் காணி மற்றும் கட்டிடங்கள் முறையே ரூ. 614,000,000 க்கும் மற்றும் ரூ. 163,000,000 க்கு மூலதனமாக்கப் பட்டிருந்தது என்பதுடன் பெறுமதி ரூ. 328,000,000 ஆகவிருந்த காணிகள் மற்றும் ரூ. 234,023,047 ஆகவிருந்த கட்டிடங்கள் மதிப்பீட்டாண்டு இறுதிவரை மறு மதிப்பீடு செய்யப் பட்டிருக்கவில்லை. | அறியத் தருகின்றேன். | உபகரண வகுப்புக்கு அமைய மொத்தமாக மறு மதிப்பீடு செய்யப் படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கணக்கியல் நியம இலக்கம் 07 இன்படி மரபுரிமைச் சொத்துக்கள் என இனங்கண்டு கொள்ளப்பட்ட ரூ. 123,825,922 பெறுமதிவாய்ந்த டவர் மண்டபம் மற்றும் ரூ. 95,579,894 பெறுமதி வாய்ந்த எல்பின்ஸ்டன் மண்டபம் தரநிலையின் 10 ஆம் பந்திக்கு அமைய தேய்மானம் செய்யப் பட்டிருக்கவில்லை என்பதுடன் தரநிலையின் 11 ஆம் பந்திக்கு அமைய வெளிப்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் வெளிப் படுத்தப் பட்டிருக்க வில்லை. | தேசிய மரபுரிமையாக இனங்காணப்பட்டுள்ள எல்பின்ஸ்டன் மண்டபம் மற்றும் டவர் மண்டபம் இலங்கைக் கணக்கியல் நியம இலக்கம் 07 இன் 10 வது பந்திக்கு அமைய தேய்மான கணக்கைப் பேணுவதற்கும் தர நிலையின் 11ஆம் பந்திக்கு அமைய குறித்த வெளிப்பாடுகளைச் செய்வதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுப்பேன் என தயவுடன் அறியத் தருகின்றேன். | தரநிலை நியமங்களின் படி தேய்மானக் கணக்குகளைப் பேணுவதற்கும் குறித்த விடயங்களை வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2018 ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் அன்பளிப்புச் செய்யப் பட்டிருந்த கெப் வண்டியின் பெறுமதி 2019 ஆம் ஆண்டு ஜனவரி 01ஆம் திகதி கணக்கில் எடுக்கப் பட்டபோது தரநிலை 25 மற்றும் 43 ஆம் பந்திகளுக்கு அமைய ஆதனத்தை சுவீகரித்துக்கொண்ட திகதியன்று நிலவிய பொதுவான பெறுமதிக்குப் பதிலாக 2017 ஆம் ஆண்டில் காப்புறுதி நடவடிக்கைக்காக மதிப்பிடப்பட்ட பெருமதியான ரூ. 4,000,000 கொள்முதல் விலையாக கருதப்பட்டு கணக்கில் பதியப்பட்டிருந்தது. அறக்கட்டளையிடம் 11 வாகனங்கள் காணப்பட்டன என்பதுடன் மேற்கூறப்பட்ட கணக்கியல் நியம இலக்கம் 07 இன் 49 ஆம் பந்திக்கு அமைய ஆதனத் தொகுதி மற்றும் உபகரண வகுப்பு மொத்தமாக | இவற்றை சரிசெய்வதற்கு இதன்பின் நடவடிக்கை எடுப்பேன் என தயவுடன் தெரிவிக்கின்றேன். | தரநிலைகளில் குறிப்பிடப்படும் நியமங்களைப் பின்பற்றி சொத்துக்களின் நியாயமான பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் இடம்பெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மறு விலைமதிப்பீடு செய்யப்பட வேண்டும் எனினும், அதற்கு மாற்றமாக மேற்குறித்த வாகனம் உள்ளடங்களாக 08 வாகனங்களை காப்புறுதி செய்வதற்கு மாத்திரம் அரச விலைமதிப்பீட்டுத் திணைக்களம் 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி பெற்றுக் கொடுத்திருந்த மதிப்பீட்டுப் பெறுமதிகளை குறித்த வாகனங்களுக்கு அத்திகதியன்று மறுமதிப்பீடு செய்யப்பட்ட பெறுமானங்களாக கணக்குகளில் காட்டப் பட்டிருந்தன. | | |
| (ஈ) | அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 07ஆம் இலக்க வழிகாட்டியின் பிரகாரம், ஏதேனும் சொத்தொன்றின் நியாயமான பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களின் ஊடாக வெளிப்படுத்தப்பட வேண்டும் எனினும் முழுவதும் தேய்மானம் செய்யப்பட்டுள்ள, எனினும் தொடர்ச்சியாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் கொள்முதல் விலை ரூ. 29,504,473 பெறுமதிவாய்ந்த 09 வாகனங்கள் விலைமதிப்பீடு செய்யப்பட்டு கணக்கில் பதியப் படுவதற்கு நடவடிக்கை எடுக்காது இருந்ததுடன், இலங்கை அரசதுறை கணக்கியல் நியமங்களின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் நிதி அறிக்கைகளில் காட்டப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை | 2021 ஆம் ஆண்டின் உள் சொத்துக்கள் முறையாக மறு மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் மீண்டும் உட்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன் என்பதை தயவுடன் அறிவிக்கின்றேன். | தரநிலையின் நிபந்தனைகளுக்கு அமைய அச் சொத்துக்களின் செயற்படும் ஆயுட்காலத்தை மீண்டும் மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.3 1.5.3 கணக்கியல் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்தவத்தின் கருத்துரை | புரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதியன்று கிரயம் ரூ. 161,750,000 ஆகவிருந்த பிரதான அலுவலகக் கட்டிடம் மற்றும் ரூ. 1,250,000 ஆகவிருந்த ஒலிமண்டபம் 2017 ஆம் ஆண்டு முதல் தேய்மானம் செய்யப் பட்டிருக்காத காரணத்தால் மதிப்பீட்டாண்டில் தேய்மானச் செலவாக ரூ. 16,300,000 வும் ஒட்டுமொத்த செலவாக ரூ. 48,900,000 குறைத்து நிதி அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ளன. | கட்டிடத்தின் உரிமை தொடர்பாக உள்ள பிரச்சினை காரணமாக அறக்கட்டளை அமைந்திருக்கும் கட்டிடத்தினதும் மற்றும் ஒலி மண்டபத்தினதும் கணக்கில் உள்ளடக்கப் பட்டுள்ளது எனினும் தேய்மானம் செய்யப் படவில்லை. எதிர்காலத்தில் இவை வழுநீக்கம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என தயவுடன் அறிவிக்கின்றேன். | சொத்துக்களின் தேய்மானச் செலவுகள் சரியாக இனங்காணப்பட்டு கணக்குகளில் காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஊழியர் பணிக்கொடைக்கான ஒதுக்கம் ரூ. 21,873,938 சேமிப்பாகவும், ஒரு வருட காலத்துக்கான நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப் பட்டிருந்த ரூ. 191,317,911 தொகை நடைமுறையல்லா சொத்துக்கள் என வகைப்படுத்தப்பட்டு நிதி அறிக்கைகளில் காட்டப் பட்டிருந்தன. | எதிர் காலத்தில் பணிக்கொடையை வேறுபடுத்திக் காட்டுவது நிதி நிலமை அறிக்கையின் பொறுப்பு எனக் குறிப்பிடப் படுவதற்கும், நிலையான வைப்புகளின் முதலீடுகளை சரியாகக் காட்டுவதற்கும் நடவடிக்கை எடுப்பேன் என தயவுடன் அறிவிக்கின்றேன். | நடைமுறை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நியமங்களில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக வகைப்படுத்தல் செய்து நிதி அறிக்கைகளில் காட்டப்பட வேண்டும். |
| (இ) | நிதிப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டுச் செயல்முறைகள் ஊடாக பிறப்பிக்கப்பட்ட நிதிப்பாய்ச்சல் கணிக்கப்படும் போது தேய்மானப் பெறுமதி ரூ. 1,412,950 தொகை குறைவாக நிதிப் பாய்ச்சல் கூற்றுடன் சரிப்படுத்தப் பட்டிருந்தது. | எதிர் காலத்தில் இதனைச் சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வேன் எனத் தயவுடன் அறிவிக்கின்றேன். | நிதியல்லாத மற்றும் நிதி உருப்படியை உரியவாறு நிதிப்பாய்ச்சல் கூற்றுடன் சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |

### 1.5.4 கணக்காய்வுக்கான எழுத்துமூலச் சாட்சியங்கள் காணப்படாமை

| விடயம் | தோகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சாட்சியம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூ. | | | |
| ஒதுக்கம் | 79,091,701 | ஐந்து வருட காலமாக தொடர்ந்து முன் கொண்டு வரப்படும் 5 கணக்கு மீதிகள் தொடர்பான தகவல்கள்/ கோப்புகள்/ ஆவணங்கள். | இம் மீதிகள் பல வருட காலமாக கணக்குப் புத்தகங்களில் முன் கொண்டு வரப்பட்ட பழைய மீதிகள் என்பதுடன் இம் மீதிகளை உறுதி செய்து கொள்வதற்குறிய குறித்த கோப்புகளை அல்லது ஏனைய ஆவணங்களை தேடிக் கண்டுபிடிக்க முடியாதுள்ளதைத் தயவுடன் அறிவிக்கின்றேன். | கணக்காய்வுக்குத் தேவையான சாட்சியங்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 வருமதி மற்றும் சென்மதிக் கணக்குகள்

### 1.6.1 வருமதித் தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| மொத்தமாக ரூ. 1,414,650 வருமதி நிலுவைத் தொகையாக கலாச்சாரத் | வருமதித் தொகையை அறவிட்டுக் கொள்வதற்கான | அறவிடப்பட வேண்டிய |

| | | |
|---|---|---|
| திணைக்களத்திலிருந்தும் ரூ. 20,735 தொகை கலாச்சார அமைச்சிடமிருந்து கிடைக்க வேண்டும் என நிதி அறிக்கைகளில் காட்டப்பபடிருந்த போதிலும் அந் நிறுவனங்களில் அவ்வாறு செலுத்தப்பட வேண்டிய மீதிகள் இல்லை என அந் நிறுவனங்கள் உறுதிப் படுத்தியுள்ளன. இதன்படி இப் பெறுமானங்கள் மீளச் சரிசெய்யப்பட்டு நிதி அறிக்கைகளில் காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப் படவில்லை. | கடிதம் அனுப்பப் பட்டுள்ளது என்பதை தயவுடன் அறிவித்துக் கொள்கின்றேன். | பெறுமதியை சரியாக உறுதிப் படுத்திக் கொண்டு நிதி அறிக்கைகளில் சரி செய்வதற்கான பணிகளை மெற்கொள்ள வேண்டும். |

### 1.6.2 செலுத்தப்பட வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| கடன் கொடுத்தோர் கணக்கின் கீழ் காட்டப்பட்டிருந்த 2009 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து காட்டப்பட்டு வரும் ஒப்பந்தப் பாதுகாப்பு வைப்பு ரூ. 15,121,232 இனை விடுவிப்பதற்கோ புத்தகங்களில் இருந்து எழுதி நீக்குவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இம் மீதியை சரி செய்வதற்கு இவ் வருடத்தில் பணியாற்றுவேன் எனத் தயவுடன் அறிவிக்கின்றேன். | செலுத்தப்பட வேண்டிய மீதியைச் சரி செய்வதற்கு அல்லது இதன்பின்னரும் பொறுப்பேற்க வேண்டிய அவசியம் இல்லையெனில் வருமானமாக வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்ட, திட்ட, ஒழுங்குமுறை மற்றும் முகாமைத்துவ தீர்மாணங்களுக்கு இணங்காமை

| | சட்ட, திட்ட, ஒழுங்குமுறை ஆகியவற்றின் குறிப்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமானக் குறிப்பின் நிதிப் பிரமானம் 381(1) | முன்றத்தில் உள்ள இரண்டு நடைமுறைக் கணக்குகள் மற்றும் இரண்டு சேமிப்புக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கு திரைசேரியிடம் அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வில்லை. | மன்றத்தின் எல்லாக் கணக்குகளுக்கும் காபந்துச் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது. ஏதிர் காலத்தில் திரைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள பணியாற்றுவேன;. | நிதிப் பிரமானக் குறிப்பின் பிரகாரம் திரைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள பணியாற்ற வேண்டும;. |
| (ஆ) | 2003 ஜுன் 02 ஆம் திகதியுடைய பீஈடீ/12 ஆம் இலக்கமுடைய | 2021 மார்ச் 04 ஆம் திகதியன்றே மதிப்பீட்டு ஆண் டுக்கான நிதி | 2020 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக கௌரவ | நிதி அறிக்கைகளைச் |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலங்கை வர்த்தக சுற்றுநிருபத்தின் 6.5.1 ஆம் பந்தி | அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப் பட்டிருந்தன. | பிரதமரின் தலைமையில் நடாத்தப்படும் அறக்கட்டளையின் நம்பிக்கைப் பொறுப்புச் சபைக் கூட்டம் நடாத்தப் படுவதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக நிதி அறிக்கைகளை கணக்காய்வுக்குச் சமர்ப்பிப்பதற்கு தாமதமாகியது என்பதை தயவுடன் தெரிவித்தக் கொள்கின்றேன். | சமர்ப்பிப்தற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | 2015 ஆம் ஆண்டின் ஜுலை 14 ஆம் திகதிய 2015/03 ஆம் இலக்க திரைசேரிச் சுற்றறிக்கை | 04 சந்தர்ப் பங்களில் ரூ. 100,000 க்கு அப்பால் சென்ற கூட்டு மொத்தத் தொகையான ரூ. 997,177 க்கான இடைக்கால முன் பணம் பெற்றுக் கொடுக்கப் பட் டிருந்ததுடன், அதன்போது ஒரு உத்தியோகத் தருக்கு ஒரே நாளில் மொத்த மாக ரூ. 571,000 க்கான 02 முன் பணங்கள் பெற்றுக் கொடுக்கப் பட்டி ருந்தன. தேவைப் பாட்டை ஆராய்ந்து பார்க்காமல் முன் பணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டதன் காரணமாக 20 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொடுக்கப் பட்டிருந்த ரூ. 896,625 க்கான மொத்த முன்பணத்தில் ரூ. 405,012 தொகை அதாவது நூற்றுக்கு 32 வீதம் முதல் நூற்றுக்கு 64 வீதம் வரை முன்பணம் அறவிடப் பட்டிருந்தன | சுற்றறிக்கையின் படி முன்பணமாக உத்தியோகத்தவர் ஒருவருக்கு ரூ. 100,000 தை விட குறைவாகவே பெற்றுக் கொடுக்கப்படும். இங்கு குறிப்பிடப் பட்டிருக்கும் 04 இடைக்கால முன்பணங்க ளில் 03 முன்பணங்கள் காசாளரினால் குறித்த கருமங்களுக்கு செலுத்த வேண்டியவர்களுக்கு செலுத்தப் பட்டுள்ளன. இதில் ஒரு முன்பணம் காசு முன்பணம் அல்ல என்பதுடன் அது கொள்வனவு முன் பணமாகும். அது குறித்த உத்தியோகத்தர் ஊடாக பெற்றுக் கொடுக்கப் பட்டுள்ளது. எதிர் காலத்தில் முன்பணங்கள் முறையாக முகாமைத்துவம் செய்யப்படுவதற்கும் முறையாக திருப்பிச் செலுத்துவதற்கும் முறையே கவனம் செலுத்துவேன். மதிப்பீடு தயாரிக்கப் படும்போது மொத்தச் செலவு கவனத்தில் எடுக்கப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப் பட்டபோதிலும், எதிர்பார்க்கப்படாத வகையில் ஏற்பாட்டாளர்களினால் உணவு பானங்கள் உபசாரம் செய்யப்படும். அவ்வாரான சந்தர்ப் | சுற்றறிக்கை மூலம் வரைமுறை விதிக்கப் பட்டுள்ள எல்லைகளுக்கு உட்பட்டதாகவும் மற்றும் தேவையை கருத்தில் கொண்டு முன்பணத்தை கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பங்களில் பெற்றுக் கொள்ளப்பட்ட முன் பணங்களின் மீதி நூற்றுக்கு 32 வீதம் முதல் நூற்றுக்கு 64 வீதம் வரை திருப்பிச் செலுத்தப் பட்டிருந்தன. | |
| (ஈ) | முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் (DMA/01-2019) ஆம் இலக்கம் மற்றும் 2019 ஜனவரி 12 ஆம் திகதிய சுற்றறிக்கையின் 5.3 ஆம் பந்தி | மதிப்பீட்டாண்டுக் கான ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சபைக் கூட்டம் மாத்திரம் நடாத்தப் பட்டுள்ளது. | 2019 ஆம் ஆண்டின் இறுதி அரையாண்டு வரை உள்ளக கணக் காய்வுப் பிரிவொன்று இல்லாதிருந்த காரணத்தால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சபைக் கூட்டங்கள் முறையாக கூட்டப்படுவதற்கு முடியாமல் போனது எனினும் 2019ஆம் வருடத்தின் ஆகஸ்ட் மாதம் ஸ்தாபிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் 2019.10.09 ஆம் திகதி 30வது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சபைக் கூட்டம் நடாத்தப் பட்டுள்ளது. முறையாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சபைக் கூட்டம் நடாத்தப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தலுக்கு அமைய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சபைக் கூட்டங்கள் நடாத்தப் படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | 02/2015 ஆம் இலக்கம் மற்றும் 2015ஆம் ஆண்டு ஜுலை 10 ஆம் திகதியுடைய அரச நிதிச் சுற்றறிக்கையின் 04(அ)ஆம் பிரிவு. | பதிவு செய்யப்பட்டு 10 வருடங்கள் கழிய முன் மோட்டார் வாகனமொன்று அகற்றப்பட்டிருந்தது என்பதுடன் அதற்கென விசேட தேடும் குழுவொன்று இமைக்கப்பட்டு அதைக் கண்டு பிடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | மைக்ரோ வகையான மோட்டார் வண்டி பதிவு செய்யப்பட்டு 2019ஆம் ஆண்டில் 10 வருடம் பூர்த்தியடைவகிறது. எனினும் 2018 ஆண்டளவில் இவ் வாகனத்தை ஓட்டிச் செல்ல முடியாத நிலைமைக்கு தள்ளப் பட்டிருந்தது. அதன் முகவர் நிறுவனம் இக் காரை பல முறை பழுது பார்ப்பு நடவடிக்கைகள் மேற்ண்டது எனினும் இம் மோட்டார் வாகனத்தை ஓட்டிச் சென்று பயன்படுத்த முடியவில்லை. ஆகையால் 02/2015 | சுற்றறிக்கையின் படி குறித்த ஆயுள் காலத்துக்கு முன் அகற்றப்படும் வாகனங்களை விசேட தேடும் குழுவொன்றை இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

அரச நிதிச் சுற்றறிக்கையின் படி, தேடும் குழுவொன்று நியமிக்கப்பட்டு 10 வருடம் பூர்த்தியாகாத வாகனத்தையும் தலைமைக் கணக்காளரான நிரல் அமைச்சின் செயலாளர் அவர்களின் அனுமதியையும் பெற்றுக் கொண்டு நீக்கிவிட முடியும் என அறிவிக்கப் பட்டிருந்ததன் காரணமாக பலமுறை பத்திரிகை விளம் பரங்கள் செய்யப்பட்டு இவ்வாகனம் விற்பனை செய்யப் பட்டுள்ளது. இதற்கு நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் சபையின் அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

## 2. நிதி மதிப்பீடு

### 2.1 நிதி நிலைமை

மதிப்பீட்டாண்டுத் தொழிற்பாடுகளின் விளைவாக ரூ. 7,503,808 க்கான பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது, இத்துடன் நேரொத்தத கடந்த ஆண்டின் இப் பற்றாக்குறை ரூ. 3,039,041 ஆகவிருந்தது. அதன்படி நிதி நிலைமையில் ரூ. 4,464,767 சரிவு ஏற்பட்டுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டது. மீண்டெழும் செலவுகளுக்காக ரூ. 12,300,000 அரச பங்களிப்பு மூலமும் மண்டப வாடகை வருமானம் ரூ. 4,545,996 வாக அதிகரித்த போதிலும் களைஞர்களுக்கு செலுத்தப்படும் ஓய்வூதியக் கொடுப்பனவு ரூ 7,818,416 இனாலும், சம்பளம் மற்றும் ஊதியங்கள் ரூ. 3,565,110 இனாலும், பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவுகள் ரூ. 2,873,202 இனாலும், பாதுகாப்புச் செலவுகள் ரூ. 2,648,927 இனாலும் அதிகரித்துள்ளமையும் இப் பற்றாக்குறைக்கு பிரதானமான காரணங்களாகும்.

## 3. செயல்திறன் மதிப்பீடு

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மதிப்பீட்டாண்டிற்காக தயார் படுத்தப் பட்டிருந்த செலவுகளுக்கான நிகழ்ச்சித் திட்டங்களின் படி, அவ் வருடத்தின் உள் ரூ. மில்லியன் 52.37 செலவு மேற்கொள்ளப்பட்டு செயற் படுத்தப்பட வேண்டிய 46 செயற்திட்டங்களில் ரூ. மில்லியன் 17.28 க்கான 18 செயற்திட்டங்கள் செயற் | ஜனவரி தொடக்கம் ஏப்ரல் மாதம் வரை குறித்த கால வரையறைக்குள் வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப் பட்டன என்பதுடன், ஏப்ரல் மாதத்தில் நிகழ்ந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின் நாடு முழுவதும் காணப்பட்ட நிலைமை காரணமாக, தனிப்பட்ட ஒன்று கூடல்கள் அரசாங்கத்தினால் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டிருந்தன. இதன்படி திட்டமிடப் பட்டிருந்தவாறு நிழ்ச்சித் | திட்மிடப் பட்டவாறு செயற் திட்நட்களைச் செயற் படுத்துவதற்கும் அவ்வாறு செயற்படுத்த முடியாத சந்தர்ப்பங்களில் திட்டத்தைத் திறுத் திக் கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள |

| | | | |
|---|---|---|---|
| | படுத்தப் பட்டிருக்கவில்லை என்பதுடன், 21 செயற் திட்டங்கள் எதிர் பார்க்கப்பட்ட நிறைவு மட்டத்தை ஒதுக்கப்பட்ட கால எல்லைக்குள் அடைந் திருக்கவில்லை. நிறைவு மட்டம் வீதம் நூற்றுக்கு 90 தொடக்கம் 95 வீதத்துக்கும் இடைப்பட்ட 04 செயற் திட்டங்களுக்கு திட்ட மிடப்பட்ட அதன் செலவுத் தொகையை விட மேலதிகமாக ரூ. மில்லியன் 1.04 செலவழிக்கப் பட்டிருந்தது. | திட்டங்களை செயற்படுத்த முடியவில்லை. மொத்தமாக திட்டமிடப்பட்ட செலவுத் தலைப்புகளுக்குறிய அனுமதிகள் பெற்றுக் கொள்ளப்பட்ட போதிலும் சில சந்தர்ப்பங்களில் திட்மிடப்பட்ட தொகையை விட அதிகமாக செலவிடப்பட்ட செயற் திட்டங்களுக்கு பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப் பட்டன. | வேண்டும். |
| (ஆ) | நகைச்சுவைப் பாடல்கள் உள்ளடங்கிய இருவட்டு ஒன்றை உருவாக்கும் செயற்திட்டத்துக்கு 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 753,450 மற்றும் ரூ.350,000 என மதிப்பீடு செய்யப்பட்டு, அவற்றின் பேரில் ரூ. 61,665 மற்றும் ரூ. 187,911 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2021 மே மாதம் அளவிலும் அதன் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்க வில்லை என்பதுடன் இருவட்டு வெளியிடப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப் படவில்லை. | நகைச்சுவைப் பாடல்கள் உள்ளடங்கிய இருவட்டின் கடைசி ஒலிப்பதிவுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த டவர் மண்டப ஒலிப்பதிவகத்தில் ஏற்பட்ட அவசர புணர்நிர்மானப் பணி காரணமாக பதிவு நடவடிக்கைகள் தாமதமாகின. மேலும் 2019 ஏப்ரல் மாதம் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாதத் தாக்குதல் காரணமாகவும் அலுவலக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியாமல் போனதன் காரணமாக இருவட்டின் தயாரிப்புப் பணிகள் தாமதமாகியது. இதற்க மேலதிகமாக இருவட்டின் இசைப் பணிப்பாளர் திடீரென நோய்வாய்ப்பட்டதன் காரணமாகவும் சில தாமதங்கள் ஏற்பட்டதெனினும் தற்போது வேறு ஒரு இசைக்கலைஞரை இணைத்தக் கொண்டு பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்பதுடன், தற்பொது இருவட்டை வெளியிடுவதற்கு தேவையான இறுதிக்கட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தயவுடன் அறிவித்துக் கொள்கின்றேன். | திட்டமிட்டபடி செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக் வேண்டும். |
| (இ) | 1978 அம் ஆண்டின் 1 ஆம் இலக்க டவர்ஹோல் மன்றச் சட்டத்தின் 8 ஆவது பிரிவு மற்றும் மன்றத்துக்குச் சொந்தமான சவ்சிரிபாய கட்டிடம் மற்றும் அது அமைந்திருக்கும் நிலப் பரப்பையும் மன்றத்துக்கு உரிமை மாற்றிக் கொடுப்பதற்குரிய 1980 ஆம் ஆண்டின் ஒக்டோபர் 08 ஆம் திகதியுடைய விசேட உரிமை மாற்றுப் பத்திரத்தின் | 1978ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கச் சட்டத்தின்படி டவர்ஹோல் மன்றத்துக்குறிய சவ்சிரிபாய கட்டிடம் நாடகத்துறை அபிவிருத்தி மற்றும் ஊக்கப்படுத்தற் நடவடிக்கை களுக்கு மாத்திரம் பயன்படுத்தப்பட வேண்டும் என ஒப்புதல் வழங்கப் பட்டிருந்தது. அதேபோல், குறித்த கருமத்துக்கு மாத்திரம் அக் கட்டிடம் பயன்படுத்தப்பட்டு வந்தன. அப்போதைய நகர அபிவிருத்தி அமைச்சரின் தலையீட்டின் பின் நகர அபிவிருத்தி அதிகாரசபை பணம் | சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் ஏனைய விதிமுறைகளின் படி பணியாற்ற வேண்டும். கட்டிடம் உபயோகப் படுத்தப் படுவதன் பேரில் அறவிடப்பட வேண்டிய மிகுதி குத்தகைக் கட்டண மதிப்பீட்டுப் பெறுமதியை |

விதிமுறைகளுக்கு அமைய குறித்த காணி மற்றும் அது அமைந்திருக்கும் கட்டிடங் களைத் தேசிய மூன்றாம் நிலை செயற்பாடுகளை ஊக்கப் படுத்துவதற்கு மற்றும் தொழில் விருத்தி செய்வதற்குத் தேவையான பணிகளுக்கன்றி வெறு பணிகளுக்கு பயன்படுத்தக் கூடாது எனவும், அவ்வாரான பணிகளுக்கு உபயோகிக்கப் படவில்லை எனில் அதை இலங்கை சனநாயக சோசலிசக் குடியசின் பேரில் உரிமை மாற்றப்படும் எனவும் குறிப்பிடப் பட்டிருந்தது. எவ் வாரெனினும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை யால் பணம் செலவழிக்கப் பட்டு சவ்சிரிபாய கட்டிடத் தைக் கட்டியதன் காரணமாக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அக் கட்டிடத்தை 30 வருடங்களுக்கு பயன்படுத்தத் தக்கவாறு குத்தகைக்கு விட 1986 மே 15 ஆம் திகதி ஒப்பந்தம் ஒன்று கைச்சாத் திடப் பட்டிருந்தது. குறித்த குத்தகை ஒப்பந்தம் 2016 மே 15 ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ளது என் பதுடன் மேற்படி உரிமை மாற்றப் பத்திரத்தின் விதிமுறைகள் கவனத்தில் எடுக்கப்படாமல் 2019 மார்ச் மாதம் 19ஆம் திகதி கட்டிடத்தை மீண்டும் நிர்மானக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் பேரில் குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. 30 வருடங் களுக்கு இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டிருந்தது.

அதன்போது முன்னைய குத்தகை ஒப்பந்தத்தில் இருந்தவாறு இக் குத்தகை வருமானத்தை அறவிடுவதற்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டிருந்தது என்பதுடன் 2016 மே 15 ஆம் திகதி முதல் 2021 மே மாதம் வரை எவ்வித குத்தகை வருமானமும் மன்றத்துக்கு செலுத்தப் பட்டிருக்கவில்லை.

செலவு செய்து இக் கட்டிடம் நிர்மாணிக்கப் பட்டது. அவ்வாராக நிர்மாணிக்கப் பட்டதன் காரணமாக 30 வருடங்களுக்கு அக் கட்டிடத்தை வீடமைப்பு அபிவி ருத்தி அதிகாரசபை பயன்படுத்தும் விதத்தில் வழங்கப்பட ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டிருந்தது. இச் சௌசிரிபாய கட்டிடம் டவர்ஹோல் மன்றத்தின் சொத்தொன்றாக காணப்படுவதால் மொத்தமாக டவர்ஹோல் மன்றத்தின் பேரில் மேற்கொள்ளப்பட்ட முதலீடாகவே இது கருதப்படுகிறது. 2016 மே 15 ஆம் திகதி தொடக்கம் 2021 மே மாதம் வரை எவ்வித குத்தகைக் கட்டணங்களும் டவர்ஹோல் மன்றத்தின் எதிர்வரும் 30 வருடங் களுக்கு கைச்சாத்திடப்பட்ட குத்தகை ஒப்பந்தத்தில் இருக்கும் குறைபாடுகள் தொடர்பாகவும் நிறுவனத்தின் நோக்கங்களுக்காக இக் கட்டிடம் பயன்படுத்தப் படுவது தொடர்பாக கௌரவ பிரதமரின் தலைமையில் நடைபெற்ற நம்பிக்கைப் பொறுப்பு சபையில் கலந்தாலோசிக்கப்பட்டன. அதன்படி 02 நிறுவனங்களுக்குறிய இரண்டு இராஜாங்க அமைச்சுக்களின் இராஜாங்க அமைச்சர்களின் தலைமையில் குறித்த அமைச்சுக்களின் செயலாளர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடாத்தப்பட்டு அவற்றின் தீர்மானங்களை கௌரவ பிரதமரிடம் சமர்ப்பிப்பதற்கு முடிவு செய்யப் பட்டிருந்தது. அதன்படி இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்களால் வழங்கப்பட்ட தீர்மானங்கள் கௌரவ பிரதமரிடம் சமர்ப்பிக்கப் படவுள்ளன. அதன் பின் கௌரவ பிரதமரிடமிருந்து கிடைக்கும் ஆலோசனைகளின் படி பணியாற்றுவேன் என தயவுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

## 3.2 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| முன்றத்தின் இணையத் தொகுதியை புதிதாக நிர்மாணிப்பதற்கும் நவீன தொழில் நுட்ப முறைகளைப் பின்பற்றி இணைய வானொலி அலைவரிசை ஒன்றை அமைப்பதற்கும் என நிறுவனம் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் போது, நிதி ஒதுக்கீட்டு வழிகாட்டற் கோவை 1.2.1 க்கு அமைவாகப் பணியாற்றி இருக்க வில்லை. இச் செயற்திட்டத்துக்கு ரூ. 1,203,315 செலவு செய்யப் பட்ட பின் செயற் திட்டத்தை நம்பிக்கைப் பொறுப்பு சபையின் அங்கீகாரத்துடன் கைவிட்டதன் காரணமாக மேற்கொள்ளப்பட்ட அச் செலவுகள் பயனற்றுப் போயுள்ளன. | ‘‘சாரஸ’’ இணைய வானொலிச் சேவையை ஆரம்பிப்பது ஆக்கபுர்வமான பணி என்பதால், அதற்காக 2019.02.13 ஆம் திகதி ஒன்றுகூடிய தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துறைகளின் படி 2019.02.13 ஆம் திகதி திணைக்கள ஒதுக்கீட்டுக் குழுக் கூட்டத்தின் அங்கீகாரத்தின் பேரில் கேள்வி மணுக் கோரல் இன்றி இலங்கை மன்ற நிறுவனத்தை இதற்கென தேர்ந்தெடுத்துள்ளனர். அதன்படி ஒதுக்கீட்டு வழிமுறைகள் பின்பற்றப் பட்டுள்ளதுடன் இதற்காக 2019.03.15 ஆம் திகதி நடைபெற்ற 2019/294/03/02ஆம் இலக்க நம்பிக்கை பொறுப்பு சபை பத்திரத்தின் ஊடாக அனுமதி பெறப்பட்டுள்ளது. இவ் வானொலி ஒரு வருட காலமாக ஒலிபரப்புச் செய்யப்பட்டு வந்ததெனினும் இவ் இணைய வானொலி அலைவரிசை மீது நேயர்களின் குறைவான ஈர்ப்பு நிலை காணப்பட்டதும், நிறுவனத்தின் நிதி நிலைமை மிகக் குறைந்த மட்டத்தில் இருந்த காரணத்தாலும், இதற்கான பிரத்தியேக அலுவலகக் குழுவொன்று காணப்படாமை காரணமாகவும் வருடாந்தம் ரூ. 52,050 செலுத்தப்படுவதும் பிரயோசனமற்ற ஒன்று என்பதால் இவ் வானொலிச் சேவையின் நடவடிக்கைகளை முன் கொண்டு செல்ல முடியாத நிலை உருவாகியது. இது இலங்கை மன்ற நிறுவனத்துடன் செய்து கொள்ளப் பட்ட ஒப்பந்தத்தின் கீழ் ஒரு வருட காலவரையறைக்கு மட்டும் செயற்படுத்தப் பட்டதொன்று என்பதாலும் அதனை நிறுத்துவதற்கு 2020.10.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட திரைசேரி சபை 2020/296/03/17 ஆம் இலக்கப் பத்திரத்தின் கீழ் நம்பிக்கைப் பொறுப்பு சபையின் அங்கீகாரத்துடன் இவ்வானொலி இடை நிறுத்தப் பட்டுள்ளது. இவ்வானொலியை உருவாக்குவதன் பேரில் மொத்தமாக ரூ. 203,040 வை இலங்கை மன்ற நிறுவனத்துக்குப் பெற்றுக் | சேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் போது ஒதுக்கிட்டு வழிகாட்டல் பிரகாரம் பணியாற்றப்பட வெண்டும் என்பதுடன், இவ்வாரான பயனற்ற செலவுகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கொடுக்கப்பட்டுள்ளது என்பதுடன் இதன்பேரில் பெற்றுக் கொள்ளப்பட்ட சகல தொழிநுட்ப சாதனங்களும் நிறுவன உபயோகத்துக்கு பயன்படுத் தப்பட்டு வருகின்றன. | |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 10 பதவிகளுக்கான 14 உத்தியோக வெற்றிடங்கள் காணப்பட்டன என்பதுடன் அதில் காணப்பட்ட 04 பதவிகளுடன் தொடர்புடைய வெற்றிடங்களை நிறப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்டாமல் ஒரு உத்தியோத்தர் மற்றும் இரண்டு பதில் கடமை ஊழியர்கள் நியமிக்கப் பட்டிருந்தனர். முன்றத்தின் செயல்திறனில் நேரடியாகச் செல்வாக்குச் செலுத்தும் 06 பதவி வெற்றிடங்களில் எந்தவொறு ஊழியரும் இருக்கவில்லை. | மன்றத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு செயல்முறைக்கு அமைய வெற்றிடம் காணப்பட்ட சில பதவிகளுக்கு தகுதிவாய்ந்தவர்கள் அமர்த்தப்பட என்பதுடன் ஆரம்ப மட்ட அரைத் திறமைச் சேவை வகுப்பு பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டதெனினும் அப் பதவிகளுக்குரிய NVQ தகுதி இல்லாமை காரணமானக பொருத்தமானவர்கள் முன்வரவில்லை. NVQ தகைமை என்பதைத் திருத்தியமைப்பதற்கு முகாமைத்துவ சேவைத் திணைக்களத்துக்கு அனுப்பட்டதெனினும் அவ் அங்கீகாரம் கிடைக்காத காரணத்தால் இப் பதவி வெற்றிடங்களை நிரப்ப முடியவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். | அத்தியவசிய பதவிகளுக்கான ஊழிய வெற்றிடங்கள் நிரப்பப் படுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |